# பதிற்றுப்பத்தில் போர்க்கருவிகளின் வேர்ச்சொற்கள்

த. சத்யா,
அகராதியியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் – 4.
muruga0202@gmail.com

15

**முன்னுரை**

நாடோடிகளாக வாழ்ந்த மனிதன் நாகரீக வளர்ச்சியின் காரணமாக வீரத்தின் வழியில் எதையும் சாதிக்க முடியும் என்பதனை அறிந்து இருந்தனர். ஆரம்ப காலத்தில் கிடைத்த உணவுகளை உண்டு வாழ்ந்தவன். பிறகு வேட்டையாடி உண்ணும் அளவிற்கு கற்றுக் கொண்டான். அதற்காக கூர்மையான கல், மரம் போன்றவற்றைப் பயன்படுத்தி விலங்குகளை வேட்டையாடி உண்டான். கால மாற்றத்தின் காரணமாக உலோகங்களைக் கண்டுபிடித்து அவற்றில் கருவிகள் செய்து பயன்படுத்தலானான். விலங்குகள் மட்டுமல்லாமல் மற்ற மனிதர்களும் தன்னைக் கண்டு அஞ்சக் காரணம் தனது வீரமே என்பதை உணர்ந்த மனிதன் தனது வீரத்தை வளர்க்க ஆரம்பித்தான். அதற்காக பல கருவிகளைத் தயாரித்து அதனை செம்மையாகவும், பாதுகாப்பாகவும் பயன்படுத்தக் கற்றுக் கொண்டான்.

அக்கருவிகளைக் கொண்டு போர் செய்து பெரும் புகழ் பெற்ற சேரமன்னர்களின் போர் சிறப்பைக் கூறும் எட்டுத்தொகை நூலான பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள போர்கருவிகளின் வேர்ச்சொற்களை தொகுப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**பதிற்றுப்பத்து**

“ஒத்த பதிற்றுப்பத்து” என்ற சிறப்புடன் எட்டுத்தொகை நூல் வரிசையில் நான்காவதாக அமைந்த நூல் பதிற்றுப்பத்தாகும். இந்நூல் பத்து சேர மன்னர்களைக் குறித்து ஒவ்வொரு மன்னருக்கும் பத்து பாடல்களாகப் பத்துப் புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற நூறு செய்யுட்கள் அடங்கிய நூலாதலின் பதிற்றுப்பத்து என்னும் பெயர் பெற்றது.

இவற்றுள் முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை இரண்டு முதல் ஒன்பதாம் பத்து முடியவுள்ள எட்டுப்பத்துக்களே கிடைத்துள்ளன. இந்நூலை தொகுத்தோர் தொகுப்பித்தோர் பற்றிய தகவல் தெரியவில்லை. பதிற்றுப்பத்து புறம்பொருள் பற்றிய நூலாகும். இந்நூல் சேர மன்னர்களின் வரலாற்றுச் செய்தியைக் காலமுறைப்படி எடுத்துக் கூறுகிறது.

**போர்**

மண், பெண், பொன் என்ற இம்மூவாசைகளுக்கும் அப்பாற்பட்ட ஆசை எதுவும் மக்களுக்கு இல்லை என்று கூறிவிடுவதற்கு இல்லை. “தோன்றின் புகழோடு தோன்றுக” என்று கூறியுள்ளார் வள்ளுவர். அது மக்களுக்குப் புகழின் பால் உள்ள ஆசையை உணர்ந்து கூறிய கூற்று ஆகும்.

பண்டைய மக்கள் தம் வழிவழியாகப் பெற்று வந்த மறவுணர்வின் மிகுதியால், போரில் பெறலாகும் வெற்றி தரும் புகழையே விழுமிய புகழாகக் கருதினார்கள். அதனால் அப்புகழை பெற தன்

நாட்டிற்கு அருகில் இருக்கும் நாடுகளையும், கடல் கடந்து சென்றும் வெற்றி பெற்று மகிழ்ந்தனர்.**(பண்டைய தமிழர் பேர் நெறி)**

மன்னர்களுக்குரிய புறவடையாளங்களாக

**“படையும், கொடியும், குடையும், முரசும்**
**நடைநவில் புரவியும் களிறும் தேரும்**
**தாரும் முடியும் நேர்வன பிறவும்**
**தெறிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய”** **(தொல்.பொருள்: 616)**

என்ற தொல்காப்பிய வரிகளால் அறியலாம்.

**போர்க்கருவிகள்**

ஆரம்பகாலத்தில் கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு கிழங்கு, காய் வகைகளை பிடிங்கியும், பறித்தும் விலங்குகளை குத்தியும், கிழித்தும் உண்டு வந்தான். நாகரீக மாற்றத்தின் காரணமாகவும் உலோகம் கண்டுபிடிப்பிற்கு பிறகும் செம்பினால் ஆன கருவிகளை விட இரும்பு வலிமை மிக்க உலோகம் என அறிந்து. அவற்றால் செய்யப்பட்ட கருவிகளைக் கொண்டு பிறரை தாக்கவும் தங்களை பிறர் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவும் பயன்படுத்தினர்.

**“நெருழை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**
**இரும்புடைப் பழவாள் வைத்தன்னனின்றி”** **(புறம்: 316.5-6)**

என்ற புறநானூற்று வரிகளின் மூலம் தலைவன் ஒருவன் தன் வீட்டிற்கு வந்த விருந்தினர்க்கு விருந்து கொடுப்பதற்கு தன்னிடம் ஒன்றும் இல்லாத நிலையில் தன்னிடம் எஞ்சியிருந்த இரும்பால் செய்யப்பட்ட வாளை கொண்டு போய் ஈடு வைத்து அதன் மூலம் பெற்ற பொருளால் விருந்தினர்க்கு உணவு நல்கிய செய்தியை அறியமுடிகிறது.

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் அவற்றைத் தொடர்ந்த இலக்கியங்களிலும் போருக்கு பயன்படுத்தப்பட்ட கருவிகளாக முப்போர்க்கருவிகள் என்ற போர்க்கருவிகளான வாள், வில், வேல் ஆகிய மூன்று கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இம்முதன்மைக் கருவிகளைத் தவிர வேறு சில கருவிகளும் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அடார், அரிவாள், எஃகம், நவியம், படைவாள், மழு, வேலுறை, கவசம், கேடயம் போன்ற கருவிகளும் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.**(கந்தையபிள்ளை, தமிழகம், ப.176)**

**பதிற்றுப்பத்தில் போர்கருவிகள்**

சங்க கால சேரமன்னர்களின் செங்கோன்மை கொடைத்திறன், படைப்பெருமை, வீர மிகுதி முதலியவற்றை மட்டுமின்றி. சங்க கால சேர மக்களின் வாழ்க்கை முறையையும் ஆடல் மற்றும் இசைக்கலைகளாகிய கூத்தர், பாணர், பாடினி, பொருநர், விறலி முதலியவர் பற்றிய செய்திகளையும் கூறவதால் சங்கத்தமிழ் மக்கள் பற்றிய சிறந்த நூலாக இந்நூல் விளங்குகிறது.

இந்நூலில் சேரமன்னர்களின் போர்த்திறன் பற்றியும் அப்போரை மேற்கொள்ள பயன்படுத்திய கருவிகளும் பாடல் வரிகளில் சொல்லப்பட்டுள்ளது. அக்கருவிகளின் வேர்ச்சொற்களும் கலைச்சொற்களும் பின்வருமாறு ஆராயப்பட்டுள்ளது.

**வேர்ச்சொற்கள்**

- ஒரு சொல்லின் அடிப்படைக் கூறே வேர்ச்சொல் ஆகும்.
- ஒரு மொழியின் பொருள், ஒலியின் அடிப்படையில் தொடர்புடைய இனைச் சொற்களில் பொதுமையாக நிற்பதே வேர்ச்சொல்லாகும். (எ.கா) நிலம். நில் –அம்**(சொல்லியல் ஆய்வுகள், சுபாஷ் சந்திரபோஸ், ப.2)**
- வேர்ச்சொல் என்பது ஒரு சொல்லில் அடிப்படையாக அமைந்துள்ள அதன் பகுதியாகும். ஒரு மொழியில் ஒலியன் அடிப்படையில் தொடர்புள்ளனவும், பொருட் தொடர்புகளைக் கொண்டனவுமான பல சொற்கள் காணப்படுகின்றன. இவை அனைத்திலும் பொதுமையாக அமைந்திருப்பவை வேர்ச்சொற்களாகும்.
- வேர்ச் சொற்கள் ஆக்க ஓட்டுக்கள் சேர்ததுப் பல புதிய சொற்களை உருவாக்கப் பயன்படுகின்றன. பொதுவாக இவை இலக்கண உறவை விளக்காது என்பதையும் அறிஞர்கள் குறிக்கின்றனர். சான்றாக நட, நடு என்னும் சொற்களின் “நட்” என்பதே வேர்ச்சொல்லாகும். ஆக்க ஒட்டுக்கள் முறையே அ, உ சேர்ந்த பிறகே அவை வினை, பெயர் எனப்பாகுபாடு செய்யப்படுகிறது. ஆக்க ஒட்டுகள் சேர்ந்த பிறகே தெளிவாக விளக்கம் கிடைத்தாலும் மேலே காட்டிய இரு சொற்களுக்கும் “நட்” என்பதே வேர்ச்சொல்லாகும்.

சில வேர்ச்சொற்களை தெளிவாக பெயர் (நெல்) வினை (நில்) என பாகுபாடுசெய்யலாம்.

**போர்க்கருவிகளின் வேர்ச்சொற்கள்**

1. எஃகம் – வேல் – **எய்** (எறிந்து தாக்கும் கருவி)
   **“செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப” (பதி: 11 - 7)**
2. பனை – முரசு – **பண்** (போரில் வெற்றி பெற்றதை முழங்குகின்ற முரசம்)
   **“வென்று எறி முழங்கு பணை செய்த வெல்போர்” (பதி: 11 - 14)**
3. வாள் – வாள் – **வள்** (வளமான வீரர் கையில் இருக்கும் வாள்)
   **“வயவர் வீழ வாள் அரில் மயக்கி” (பதி: 12 -1)**
4. எஃகு – அரிவாள் – **என்கு** (இரும்பாலான கருவி)
   **“எஃகு போழ்ந்து அறுத்த வால் நினைக் கொழுங்குறை” (பதி: 12 - 16)**
5. மெய்ம்மறை – மார்புக்கவசம் – **மெய்** (உடலை பாதுகாக்கும் கவசம் என்னும் கருவி)
   **“நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை” (பதி: 14 -17)**
6. அம்பு – கணை – **அம்** (வில்லில் வைத்து எய்தப்படும் அம்பு)
   **“அம்புடைய வலத்தர் உயர்ந்தோர் பரவ” (பதி: 80 -11)**
7. எஃகம் – வாள் – **எய்** (வீசுதல் மூலம் பிறரை தாக்குதல்)
   **“திண்பிணி எஃகம் புலி உறை கழிப்பு” (பதி: 19 - 4)**
8. ஏ – அம்பு – **எய்** (வில்லில் வைத்து எய்தப்படும் அம்பு)
   **“எயில் எறி வல்வில், ஏ விளங்கு தடக்கை” (பதி: 58 - 10)**
9. தண்ணுமை – ஒருவகைப்பறை – **தண்** (அகப்புற முழவுள் ஒன்றாகிய மத்தளம்)
   **“தூக்கனை கிழித்த மாக் கண் தண்ணுமை” (பதி: 51 - 33)**
10. திகிரி – சக்கரப்படை – **திகில்** (திருமாலின் வலது கையிலிருந்து ஓர் ஆயுதம்)

**“கண்பொரு திகிரி, கமழ் குரல் துழாஅய்”** **(பதி: 31 -8)**

11. தோமரம் – தண்டாயுதம் – **தோமம்** (ஒருவகைப் போர்கருவி )

**“தோரம வலத்தர் நாமம் செய்ம்மார்”** **(பதி: 54 - 14)**

12. தோல் – கேடகம் – **தொல்** (தோலினாலான கேடகம்)

**“புரை தோல் வரைப்பின் எஃகு மீன் அவிர் வர”** **(பதி: 50 - 9)**

13. பதலை – ஒருவகைப்பறை – **பதல்** (ஒரு தலைமுகமுடைய ஒரு தோற்கருவி)

**“பண் அமை முழவும் பதலையும் பிறவும்”** **(பதி: 41 - 3)**

14. பறை – பறை – **பறை** (குச்சியாலும், கையாலும் முழக்கப்படும் இசைக்கருவி)

**“போர்த்து எறிந்த பறையால் புனல் செறுக்கு நகரும்”** **(பதி: 22 - 28)**

15. மயிர் புதை மாக்கண் – முரசு – **முருள்** (முடியுடன் கூடிய எருதி தோல் போர்த்தப்பட்ட பெரிய கண்ணையுடைய கடுமுழக்கம் உடைய முரள்)

**“மயிர் புதை மாக் கண் கடிய கழற”** **(பதி: 29 -12)**

16. முழா – முழவு – **முழா** (அரை கோள வடிவத்தில் பெரிதாக இருக்கும் ஒரு வகை தோற்கருவி)

**“முழா இமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணை ஆக”** **(பதி: 52 - 14)**

17. மெய்புதை அரணம் – கவசம் – **மெய்** (புலியினது தோலால் செய்யப்பட்ட மெய்புடு கருவி)

**“மெய் புதைகு அரணம் எண்ணாது எஃகு சுமந்து”** **(பதி: 52 - 6)**

18. உயிர் – ஊதுகொம்பு – **வல்,வய்** (வலிமையான ஒலியுடைய இசைக்கருவி)

**“வயங்கு கதிர் வயிரொடு வலம்புரி ஆர்ப்ப”** **(பதி: 67 - 6)**

19. வேல் – எறிபடை – **வெல்** (படையைத் தாங்கிய வேல் எனப்பட்டது)

**“வயங்கு மணி இமைப்பின் வேல் இடுபு”** **(பதி: 45 -21)**

**முடிவுரை**

- காடுகளிலும், மலைகளிலும் கிடைத்ததை உண்டு வாழ்ந்த மனிதன் அறிவு வளர்ச்சியினால் எவ்வாறு உணவைத் தேடி உண்ணலாம் என்பதை அறிந்து அதற்காகன கருவிகளை உருவாக்கியும் பயன் பெற்றான்.
- வேட்டையாடி உணவு உண்டு உயிர்வாழ தயாரிக்கப்பட்ட கருவிகள் மூலம் போரிட்டு வெற்றியும் கண்டான்.
- அக்கருவிகளின் வேர்ச்சொற்களை தொகுத்திருப்பதன் மூலம் அக்காலத்தில் தயாரிக்கப்பட்ட கருவிகள் அமைப்பாலும், செயலாலும் பெயர் பெற்றுள்ளது என்றும் அதன் வினையடியாகவே வேர்ச்சொற்கள் தோன்றியுள்ளன என்பதையும் இக்கட்டுரையில் அறிய முடிகிறது.

**பயன்படுத்திய நூல்கள்**

1. ஆசிரியர் குழு, செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, அகரமுதலி திட்ட இயக்க வெளியீடு, சென்னை.
2. சித்திரபுத்திரன். எச், சொல்லும் பொருளும், அன்னம் அகரம், தஞ்சாவூர்.

3. சுபாஷ் சந்திர போஸ், சொல்லியல் ஆய்வுகள், மெய்யப்பன், தமிழாய்வுகள், சிதம்பரம், பதிப்பு: 2000.
4. ந.சி.கந்தையாபிள்ளை, தமிழகம், கௌரா பதிப்பகம், சென்னை, 2018.
5. பண்டைத்தமிழர் போர் நெறி, கோவிந்தன்.கா, தமிழ்த்தாய் பதிப்பகம், சென்னை, பதிப்பு: 2011.
6. பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு: 2017.